# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 5 மே - 2005

## ஏலகிரியில் எட்டாவது வேனிற்கால வேதாகம முகாம் - 2005



எட்டாவது வேனிற்கால வேதாகம முகாமில் கலந்து கொண்ட சிறுவர், சிறுமியர்



எட்டாவது வேனிற்கால வேதாகம முகாமில்
பெண்களுக்கான சிறப்பு வகுப்பில் ஒரு பகுதி...

வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701. தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கர்த்தருடைய பந்தியில் நாம் ஏன் பங்கு பெறுகிறோம் 10
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 20
5. சிறுவர் பகுதி ........ 23
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 26
7. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ...... 31

# THIRUMARAI AASAAN
## Published by Church of Christ

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 18 MAY - 2005 Issue - 5


ஆசிரியர் உரை

## "என் ஆவி பிரியுமட்டும் ... உத்தமத்தை ... விலக்கேன்"

இப்பூமியின் வாழ்க்கையில், நம் ஒவ்வொருவருக்கும் பிடித்தமானவர்களென்றும், மிகவும் பிடித்தமானவர்களென்றும் சிலபேர் இருப்பர். அப்படிப்பட்டவர்களை நாம் அதிகமாக நேசிப்போம், மிகவும் உயர்வாக மதிப்போம். அவர்களைப் பற்றி நாம் பிறரிடம் பேசும் போதும், சில நேரங்களில் அவர்களை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்யும்போதும் மிகச் சிறந்த வார்த்தைகளைப் பொறுக்கியெடுத்து, அவர்களுக்காகப் பயன்படுத்தி, அதன் மூலம் அவர்கள் மீது நமக்கிருக்கும் அன்பையும், மரியாதையையும் வெளிப்படுத்துவோம். இப்படிச் செய்வது, நம் எல்லோருக்கும் பொதுவான ஒன்று தான். ஆனால், இது மனிதர்களாகிய நமக்கு மட்டும் தான் சொந்தம் என்று நாம் நினையாதபடி, இதே பாணி, பரிசுத்த வேதாகமத்திலும் பரலோகத்தின் தேவனால் கடைப்பிடிக்கப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஆம் பல தேவதாசர்களை, தேவன் சிறந்த அடைமொழிகளால் நமக்கு அடையாளம் காட்டியிருக்கிறார்.

பெருவெள்ள காலத்துப் பிரசங்கியாகிய நோவாவை தேவன், நீதிமான் என்றும் உத்தமன் என்றும் கூறுகிறார் (ஆதி 6:9) இதே பதங்கள், புதிய ஏற்பாட்டில், இயேசுவின் சரீரத்தைப் பிலாத்துவிடம் வாங்கி அடக்கம் செய்த, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புக்கும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது (லூக் 20:50, 51). மேலும், அப்போஸ்தலர் 18 ஆம் அதிகாரத்தில், அலெக்சாந்திரியா பட்டணத்து அப்பொல்லோ என்பவனைக் குறித்து, "சாதுரியவானென்றும், வேதாகமங்களில் வல்லவன்" என்றும் தேவனால் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. (18:24) இப்படி வேதாகமம் சிலருக்கு சிறப்பான அறிமுகம் கொடுத்தாலும், பக்தன் யோபுவுக்குத்

தேவனால் கொடுக்கப்பட்ட அறிமுகம் போல வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லையென்று நாம் தைரியமாகவே அடித்துக் கூறலாம். ஒருவேளை, ஏசாயா 9:6-ல், நம்முடைய இரட்சகர் இயேசுவுக்கு, அவர் பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே, "**அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு**" என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்று நீங்கள் கேட்கலாம். அது நியாயம் தான். ஆனால், அவர் தேவ மைந்தன் ஆயிற்றே ! அவருக்கு ஈடும், இணையும் உண்டா? முழுக்க முழுக்க நம்மைப் போன்றதொரு மனிதனாகிய யோபுவை மீட்பரோடு ஒப்பிட முடியுமா? முடியாது தானே.

சரி, மிகச் சிறந்ததொரு அறிமுகத்துக்குச் சொந்தக்காரனாகிய யோபுவைக் குறித்து தேவன் தமது வசனங்களில், இவ்விதம் வர்ணிக்கிறார். "**உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன்**" (யோபு 1:1). இந்த நான்கு சொற்றொடர்களையும் கவனித்தால், இப்படியும் ஒரு மனிதன் இருந்திருப்பானா என்று தான் எண்ணத் தோன்றுகிறது. இன்னும், இவ்வார்த்தைகளுக்கான பொருளை ஆராய்ந்தால், இவனைப் பற்றி பேசுவதற்கு நமக்கு என்ன அருகதை இருக்கிறதென்றும் நினைக்கச் செய்கிறது!

இப்பொழுது இவனுக்காக தேவன் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகளின் பொருளை கவனிப்போம். **உத்தமன்** என்பதற்கான பொருள், ஒரு போதும் பாவமே செய்யாத நிலையல்ல. ஆனால், பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, மீண்டும் தன்னை பாவத்திற்கு அடிமைப் படுத்தாததொரு நிலை என்று சொல்லலாம். இங்கே நான் ஒன்றைக் கேட்கிறேன். இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு விட்டேன் என்று சொல்லுகிற அநேகரால் இந்த உத்தம நிலையை எட்டிப்பிடிக்க முடிந்திருக்கிறதா? சிந்திப்போம். அடுத்து, **சன்மார்க்கன்** இவ்வார்த்தை நமக்கு அதிக பழக்கமில்லாத வார்த்தை போல தெரியும். ஆனால், இது, நமக்கு அதிகம் பழக்கமுள்ள துன்மார்க்கத்திற்கு எதிரான வார்த்தை. ஒழுக்கக்கேடற்ற, நீதிநெறி தவறாத வாழ்க்கையை அடையாளப்படுத்துவது. மூன்றாவது, **தேவனுக்குப் பயப்படுகிறவன்** இன்றைக்குப் பலர், காரண காரியம் தெரியாமல் ஒரு தெய்வத்திற்கும், தெய்வங்களென்று கருதப்படு பவைகளுக்கும் பயப்படுகிறார்களல்லவா, அது போன்ற பயமல்ல யோபுவின் பயம். மாறாக, சர்வவல்ல தேவனுடைய மகிமை, மாட்சிமை, மகத்துவம் போன்றவற்றை அறிந்து, உணர்ந்து, அதனடிப்படையில் பெற்றுக்கொண்ட பயம். நான்காவது, **பொல்லாப்புக்கு விலகுதல்** பொல்லாப்பு எது என்றும் பொல்லாப்பு அல்லாதது எது என்றும் நமக்குக் காட்டுவது தேவனுடைய வார்த்தைகள் தான். அப்படியானால்,

இவன் தேவனுடைய வார்த்தைகளைத் தெரிந்து, அதனடிப்படையில், பொல்லாப்பு எது அல்லது எவைகள் என்பதைக் கண்டறிந்து, அவைகளுக்குத் தன்னை முற்றும் விலக்கி காத்துக் கொண்டதோர் வாழ்க்கை நடத்தியவன். அப்பப்பா, எவ்வளவு பெரிய மனிதன் இந்த யோபு என்று எண்ணிப் பாருங்களே ! தேவன், இவனைப் பற்றி இத்தோடு நிறுத்தினாரா? இல்லை. இன்னொன்றும் இருக்கிறது கவனியுங்கள். **இவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லையாம்** (யோபு 1:8). இதற்கு மேல், என்ன வேண்டும்?

சரி, இப்படிப் பரலோகத்தின் தேவனாலே, வெகுவாக மெச்சப்படுமளவுக்கு, வியத்தகு வாழ்க்கை வாழ்ந்த பக்தன் யோபு, தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், தனக்கு ஏற்பட்ட கதியைக் கேள்விப்பட்டு தனக்கு ஆறுதல் சொல்லவும், தன்னோடு சேர்ந்து பரிதபிக்கவும், தூரத்திலிருந்து வந்த நண்பர்களிடம், மிகவும் உறுதிபட, **என் ஆவி பிரியுமட்டும், என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்** என்று கறாராகக் கூறுகிறான் (யோபு 27:5) தேமானியனான எலிப்பாசும், சூகியனான பில்தாத்தும், நாகமாத்தியனான சோப்பாரும், தங்கள் நண்பனாகிய யோபுவின் சரீரத்திலும், மனத்திலும் ஏற்பட்ட காயங்களுக்கு தங்கள் வார்த்தைகளால் மருந்து போடுகிறோம் என்று எண்ணிக் கொண்டு, "வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும்" வேலையை வெகுநேர்த்தியாகச் செய்தார்கள். சொல்லப்போனால், யோபுவுடனான அவர்களின் வாதமும், பிரதிவாதமும், ஒருவனை ஆடையில்லாமல் சுடுமணலில் போட்டு புரட்டுவது போலும், வாணலியில் போட்டு வறுத்தெடுப்பது போலவுமே இருந்தது. "சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்" (நீதி 17:17) என்ற ஞானியின் கூற்றைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டவர்களாகவே, தங்கள் பேச்சை ஆரம்பித்து, தொடர்ந்து, பிறகு முடிக்கவும் செய்தனர்.

ஒரு கட்டத்தில், யோபுவின் நண்பர்கள் மூவரும் ஏகோபித்த குரலில், **நான் பாவம் செய்தேன். ஆகவே, மனந்திரும்புகிறேன்** என்று யோபு சொல்லியே ஆக வேண்டும். அப்பொழுது தான் விடுதலை என்று நெருக்க ஆரம்பித்தனர். அப்பொழுது தான், கொஞ்சம் பொறுமையிழந்த இந்தப் பொறுமையின் சிகரம், அந்தப் பேச்சுக்கே இடமில்லையென்பதை அவர்கள் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளும்படி, என் ஆவி பிரியும் மட்டும், என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று இடியாய் முழங்கினார். வீம்புக்கோ, வீராப்புக்கோ யோபு இந்த வார்த்தைகளைப் பேசாமல், விஷய ஞானத்தோடே தான் பேசியிருக்கிறார் என்பதை, பிற்பாடு பரலோகத்தின் தேவன் இவனுக்குக் கொடுக்கும் சாட்சியிலிருந்தும், இவன் பெற்றுக் கொண்ட இரட்டிப்பான ஆசீர்வாதத்திலிருந்தும் நாம் தெரிந்து கொள்ள முடியும்.

ஆனாலும், யோபு, இவ்வார்த்தைகளைத் தன் நண்பர்களிடம் கூறிய பொழுது, அவனுக்கிருந்த சூழ்நிலையைக் கண்முன் கொண்டு வந்து பார்த்தால், உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. சில வேளைகளில், ஒரு வார்த்தையோ அல்லது வாக்கியமோ எந்தச் சூழ்நிலையில் சொல்லப்படுகிறதென்பதைப் பொறுத்து அதற்கான முக்கியத்துவம் பெறுகிறது. உதாரணமாக, கிறிஸ்தவம் "மன்னிப்பின் மார்க்கம்" என்று உலகெங்கும் அங்கீகரிக்கப்பட்டதற்குக் காரணம், இயேசு, மலைப் பிரசங்கத்திலோ அல்லது ஊழிய நாட்களிலோ மன்னிப்பு பற்றிப் பேசியது மட்டுமல்ல. மாறாக, கொல்கொதா மலையில், அந்தக் கொடுஞ்சிலுவையில், தன்னைச் சீரழித்துச் சின்னப்படுத்திய, அந்த மா பாதகர்களைப் பார்த்து, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று சொன்னது தான். (லூக் 23:34) ஆக சொல்லப்படும் ஒன்று, எந்தச் சூழ்நிலையில் சொல்லப்படுகிறதென்பதைப் பொறுத்து அதன் முக்கியத்துவம் கூடுகிறது அல்லது குறைகிறது.

அப்படியானால், பக்தன் யோபு, என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்று எந்தச் சூழ்நிலையில் சொன்னார் என்பதை நாம் கவனிக்க வேண்டுவது அவசியம். அப்பொழுது தான், யோபுவின் உத்தமத்தின் மேன்மை நமக்கு விளங்கும். அப்பொழுது தான், அந்த உத்தமம், நம்முடைய வாழ்க்கைக்கு என்ன பாடம் கற்றுக் கொடுக்கிறதென்று நாம் அறிந்து கொள்ள முடியும். அப்பொழுது தான் அவன் உத்தமத்தை நாமும் பின்பற்றி வாழ முடியும். இப்பொழுது யோபு சொன்ன சூழ்நிலையைக் கவனிப்போமா?

## முதலாவது, தனது செல்வங்களை இழந்தான்

"என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்ற அவ்வார்த்தைகளை அவன் உதிர்த்த பொழுது, தன் செல்வங்களை இழந்திருந்தான்.

யோபுவுக்கு இருந்த செல்வங்கள் கொஞ்சமா என்ன? இன்றைக்கு செல்வந்தர்களுக்கான தரப்பட்டியல் வெளியிடுவது போல, அன்றைக்கு ஒருவேளை தரப்பட்டியல் வெளியிட்டிருந்தால், இவன் தான் நம்பர் ஒன்றாக இருந்திருப்பான் என நினைக்கிறேன். 7000 ஆடுகள் ஒரு 100 ஆடுகளும் அதற்கான மேய்ச்சல் நிலமுமிருந்தால், இன்றைக்கு ஒருவன் பண்ணையார் என்று அழைக்கப்படுகிறான். அப்படியானால், யோபுவை எப்படி அழைப்பது? சொல்லத் தேவை யில்லை அப்படித்தானே! அடுத்து, 3000 ஒட்டகங்கள். ஆடுகள் ஆயிரங்களில் என்பது ஓரளவுக்கு விளங்குகிறது. ஆனால், ஒட்டகங்கள் 3000 என்பது சரியாக அறிவுக்கு எட்டவில்லைதானே. ஒருவேளை, போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்நாட்களில், போக்குவரத்து ஊர்திகளாக ஒட்டகங்களே பயன்படுத்தப்பட்டிருக்க

வேண்டும். அப்படியானால், அன்றைய நாட்களின் போக்குவரத்து அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிலே வைத்து, "பஸ் அதிபர்" என்பது போல "ஒட்டக அதிபராக" இருந்திருப்பானோ நம் யோபு. அடுத்து, 500 ஏர்மாடுகள். இரண்டு ஏர்மாடுகள் போதும், 5-10 ஏக்கர் வரை உழுவதற்கு. அப்படியானால், இவனுக்கிருந்த விளை நிலத்தின் அளவும், நிலபுலங்களின் அளவும் தான் எவ்வளவு? இவை போதாதென்று கழுதைகள் வேறு 500 ஆம். பொதி சுமப்பதற்கான மிருகம் தான் கழுதை. அப்படியானால் இவ்வளவு கழுதைகள் எதற்கு? 500 கழுதைகளும் எதைச் சுமந்திருக்கும்? பரந்து விரிந்த அவனது நிலங்களில் விளைந்து, அறுத்து, களங்களில் குவிந்தவைகளை வீடு கொண்டு வந்து சேர்க்க கழுதைகள் பயன் பட்டிருக்குமோ?. நம்முடைய ஊகம் சரியானால், இவன், "பஸ் அதிபராக" மாத்திரமல்ல, "லாரி அதிபராகவும்" இருந்துள்ளான்.

அன்பர்களே, இவையனைத்தையும், ஒரே நாளில் இழந்து விட்ட நிலையில் தான், (யோபு 1:13-17) அவன், "என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று யோபு கூறியுள்ளான் என்பதை கவனிக்க மறந்து விடாதீர்கள். நம்முடைய உத்தமம் எந்தளவு உள்ளதென்பதை நிதானித்துப் பாருங்கள்.

## இரண்டாவது, பெற்று வளர்த்த பிள்ளைகளை இழந்தான்

என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன் என்ற போது, தான் ஆசையோடு பெற்று, பாசத்தோடு வளர்த்த பிள்ளைகளனைவரையும் ஒரு சேர இழந்திருந்தான்.

வேத வசனங்கள் அவனுக்கு, 7 குமாரர்களும், 3 குமாரத்திகளும் பிறந்தார்கள் என்று சொல்கிறது (1:2). இந்த யோபு, தன் பிள்ளைகளை எவ்வளவு நேசித்தான் என்பதற்குச் சான்றாக வசனம் 1:5 நாம் காட்டலாம். அங்கே, தன் பிள்ளைகள், இருதயத்திலே தேவனை தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, **எல்லோருடைய இலக்கத்தின்படியும் சர்வாங்க தகன பலி செலுத்துவானாம்.** இன்றைக்குப் பிள்ளைகள் வெளிப்படையாகச் செய்த தவறுகளுக்கே வக்காலத்து வாங்கும் பெற்றோர்களைத் தான் சமுதாயத்தில் பார்க்க முடிகிறதேயொழிய மற்றபடி பிள்ளைகளின் பாவங்களுக்குப் பரிகாரம் தேட முயற்சிக்கும் பெற்றோர்கள் எங்கே இருக்கிறார்கள்? பூத கண்ணாடி வைத்து தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால், யோபு பிள்ளைகளை நேசித்து, அவர்கள் ஆத்தும நலனில் அக்கறை செலுத்தியுள்ளான்.

இப்படி, தான் இந்தளவு நேசித்த பிள்ளைகளை நொடியில் இழந்தான். பிள்ளைகள் பெற்றோரை இழப்பது வேதனை தரத்தக்கது தான் என்றாலும், பெற்றோர்கள் பிள்ளைகளை இழக்கும் துக்கத்திற்கு அது ஈடாகாது. பெற்றோரின் உடம்பில் பிள்ளைகளின் இரத்தம் ஓடுவதில்லை.

ஆனால், பிள்ளைகளின் உடம்பில் பெற்றோரின் இரத்தம் ஓடுகிறது. பெற்றெடுத்த பிள்ளைகளில் ஒன்றை இழப்பதே தாங்க முடியாததாக இருக்கும் போது, பத்துப்பேரையும் ஒரு சேர இழப்பதென்பதை எண்ணிப் பார்க்கவே பயங்கரமாக உள்ளது. யோபுவின் மனம், எப்படித் துடியாய் துடித்திருக்கு மென்று கற்பனை செய்து பார்க்கவே மனம் மறுக்கிறது. வேத வசனங்கள் அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்றே வர்ணிக்கிறது. இப்படிப்பட்ட துக்கம் வேறு யாருக்கும் வரவேண்டாமென்று தானே எண்ணத் தூண்டுகிறது.

சரி, இப்படி யோபு, வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத துக்கங்கொண்டிருந்த அந்த நிலையில் தான் சொல்லியிருக்கிறான் "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று. அன்பரே, நம் உத்தமம் எப்படி?

## மூன்றாவது, சரீர சுகத்தையும், மனைவியின் அன்பையும் இழந்தான்

"என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை விட்டு விலக்கேன்" என்று அவன் சொன்னபோது, தன் சரீர சுகம் அனைத்தையும், மனைவியின் அன்பையும் இழந்திருந்தான்.

நோயற்ற வாழ்வின் அருமை நோய் வந்த பிறகு தான் ஒருவனுக்குத் தெரியும். ஒருவனுக்கு வரும் வியாதிகளையெல்லாம் நாம் ஒரே ரகத்தில் எடுத்துக் கொள்ள முடியாது. அவைகளில், மரணத்துக்கேதுவானவைகளும் உண்டு. மரணத்துக்கேதுவற்றவைகளும் உண்டு. இங்கே யோபுவுக்கு வந்த வியாதி முதல் ரகம். கொடிய வியாதி. உள்ளங்கால் தொடங்கி, உச்சந்தலை மட்டும் கொடிய பருக்கள். இந்த வியாதியின் தன்மை பற்றிக்கூறும் ஒரு வேத அறிஞன், "இது குஷ்டரோகமல்ல, ஆனால், குஷ்டத்திற்கு எந்த வகையிலும் குறைவானதல்ல" என்று விளக்குகிறார். அப்படியானால், அந்த வியாதியால், அவன் அடைந்த சரீர வேதனையும், அது தந்த மன வேதனையும் எந்தளவு இருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள்.

அவனுக்கு ஏற்பட்ட வியாதியின் கொடுமையைக் கண்ணுற்ற அவன் மனைவி, அவனைப் பார்த்து, மிகவும் கிண்டலாக, "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ?" என்று சொன்னதோடு, அட மனுஷா, உன்னை இவ்வளவு பாடுபடுத்தும் தேவனை தூஷி என்று சீண்டிவிடுகிறாள். (2:9) அவன் வியாதி, கடுமையானது என்பதற்கு அவன் மனைவியின் இவ்வாக்கியம் தவிர வேறு என்ன சான்று வேண்டும்? போதாதற்கு அவனுடைய நண்பர்கள் வேறு, தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, **அவனை உருத்தெரியாமல்** சத்தமிட்டு அழுதிருக்கிறார்கள் (2:11) யோபுவே கூட, தன் பிறந்த நாளை சபித்திருக்கிறானென்றால் பார்த்துக் கொள்ளுங்களே! (3:3) அவன் சரீரத்தில் பட்ட வேதனைகளுக்கு இதற்கு மேல் விளக்கமே தேவையில்லை.

அன்பானவர்களே!, இப்படிப்பட்ட அகோர நிலையில் தான், இப்பழம் பெரும் பக்தன் யோபு, "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று கூறியுள்ளான். நாமும் தான் நம்மை பக்திமான்கள் என்று அழைத்துக் கொள்கிறோம். யோபுவுக்குப் பக்கத்தில் போக முடியுமா?

**<u>நான்காவது, நண்பர்களின் நம்பிக்கையை இழந்ததோடு, கண்டனத்துக்கும் உள்ளானான்.</u>**

"என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று அவன் முழங்கிய போது, தன் பிராண சிநேகிதர்களின் நம்பிக்கையை இழந்ததோடு, அவர்களின் கடுமையான கண்டனத்துக்கும் உள்ளாகியிருந்தான்.

யோபுவின் புத்தகத்தின் பெரும்பகுதி, அவனுக்கும், அவனது நண்பர்களுக்கும் இடையே நடந்த உரையாடல்களைக் கொண்டதாகவே உள்ளது. இந்நண்பர்கள் மூவரும் யோபு அழைந்து வந்தவர்களல்ல. மாறாக, நடந்தவைகளைக் கேள்விப்பட்டு வந்தவர்கள் வந்து யோபுவுக்கு நேர்ந்த கதியைக் கண்டு, கலங்கி, தங்கள் சால்வைகளைக் கிழித்து, தங்கள் தலையின்மேல் புழுதியை தூற்றிக்கொண்டவர்கள். அத்தோடு, அவன் நிலையைக் கண்டு விம்மி, விக்கி ஒரு வார்த்தையும் பேசாமல், இரவு பகல் ஏழு நாள் அவனோடே கூடத் தரையில் உட்கார்ந்தார்கள்.

இந்தளவு யோபுவை நேசித்த நண்பர்களின் நம்பிக்கையை யோபு இழந்து, இங்கே நிராதரவாகக் காட்சி தருகிறான். ஆம், ஆறுதல் தந்து தேற்றுவார்களென்று எதிர்பார்க்கப்பட்ட நண்பர்கள், யோபுவை வார்த்தைகளால் வாட்டி வதைத்தனர். தேமானியனான எலிப்பாசு, **குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ? என்றும், நான் கண்டிருக்கிறபடி அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்** (4:7,8) என்றும் சொல்லி, தப்புத் தாளத்திற்கு தாயம் போட்டான். இவன் பேசுவதைக் கண்டு அதிர்ந்து போன யோபு, இப்படிப்பேசி, என்னை வார்த்தைகளால் வதைக்காமல், **நான் எதிலே தவறினேனோ அதை எனக்குத் தெரியப்படுத்துங்கள்** என்று கெஞ்சுகிறான் (6,24) ஆனால், கிஞ்சித்தும் இரக்கமில்லாத பில்தாத்தோ, **தேவன் நியாயத்தைப் புரட்டுவாரோ?** என்று கூறியதோடு, **தேவன் உத்தமனை வெறுக்கிறதில்லை** என்ற கண்டுபிடிப்பையும், தன்னுடைய மேதாவித்தனத்தையும் வெளியிடுகிறான். (8:3,20) இந்த உண்மை யோபுவுக்குத் தெரியாதா என்ன? தன்னுடைய இரண்டு நண்பர்கள், இப்படி அர்த்தமில்லாமல் பேசி அடம் பிடிப்பதைக் கண்ட யோபு, இனி இவர்களிடத்தில் பேசி எந்தப் பயனும் இல்லையென்று கண்டு, தேவனுடைய மகத்துவங்களைப் பேச ஆரம்பிக்கிறான். "**ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்**" (9:10) என்றும், "**இதோ, அவர் பறித்துக் கொண்டு**

**போகிறார், அவரை மறுப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவர் யார்?** என்றும் பேச ஆரம்பித்தான். (9:12). இதைக் கண்ட அந்த மூன்றாவது நண்பனாகிய சோப்ளாங்கி சோப்பார், **வாய்ச்சாலகன் நீதிமானாய் விளங்குவானோ? என்று கூறி,** யோபுவை ஒரு வாயாடி என்று வாய் கூசாமல் கூறுகிறான் (11:2)

இவர்களின் சொல் அடி தாங்க முடியாத யோபு, ஒரு கட்டத்தில், கையெடுத்துக் கும்பிடாத குறையாக, **"இப்போதும், நீங்கள் எல்லாரும் போய் வாருங்கள்"** என்றான் (17:10) இச்சமயத்தில், அவன் இருதயம் எப்படியிருந்திருக்குமென்று எண்ணிப்பாருங்கள். அப்போதும், அவர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாததைக் கண்டு கண்ணீரும், கம்பலையுமாய், **"நீங்கள் எந்த மட்டும் என் ஆத்துமாவை வருத்தப்படுத்தி, வார்த்தைகளால் என்னை நொறுக்குவீர்கள்?** என்று அலறியுள்ளான்.

அருமையான தேவப்பிள்ளையே, தன் நண்பர்கள், இப்படித் தன்னை ஈனப்படுத்திய நிலையிலும், யோபு, "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று கூறியுள்ளதை கவனிக்க மறந்து விடாதீர்கள். கவனிப்பதோடு நிறுத்தியும் விடாதீர்கள்; செயல்படுங்கள்.

## ஐந்தாவது, மரியாதையை இழந்தான்

"என் ஆவிபிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று சொன்னபோது, தன் மரியாதையையும் இழந்துவிட்டவனாக இருந்துள்ளான் என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது.

ஒரு மனிதனுக்கு மானமும், மரியாதையும் மிகவும் முக்கியம். ஊன் இல்லாமலும், உடையில்லாமலும் கூட எப்படியோ நாட்களைக் கடத்தலாம். ஆனால் மரியாதை இல்லாமல் வாழ்வது அவ்வளவு சுலபமானது அல்ல. ஒருவேளை, ஆரம்பமுதலே, மரியாதை அற்ற ஒரு வாழ்க்கை வாழ நேர்ந்திருந்தால் அது வேறு விஷயம். ஆனால், மரியாதையோடு வாழ்ந்து, பிறகு அதை இழக்க நேருவது வேதனையிலும், வேதனை. செய்தித் தாள்களிலே இடம்பிடிக்கிற அநேக தற்கொலைகளுக்குக் காரணம் மானப்பிரச்சினையும், மரியாதைப் பிரச்சினையும் தான்.

யோபுவுக்கு இருந்த செல்வத்திற்கும், செல்வாக்கிற்கும், ஒழுக்கத்திற்கும், பக்திநிலைக்கும் அவன் எவ்வளவு மரியாதையோடு வாழ்ந்திருப்பான் என்பதை நாம் சொல்லவும் தேவையில்லை. அப்படி மரியாதையோடு ஜீவித்த யோபு, தான் எந்தளவு மரியாதையை இழந்து, தாழ்ந்து கிடந்தான் என்பதை அவன் வாயாலேயே சொல்வதைக் கேளுங்கள். **"இப்போதோ என்னிலும் இளவயதானவர்கள் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள், இவர்களுடைய பிதாக்களை நான் என்**

**மந்தையைக் காக்கும் நாய்களோடே வைக்கவுங்கூட வெட்கப் பட்டிருப்பேன்"** (3:10) அப்பப்பா, யோபு சொல்வது "கொஞ்சம் கூட" என்பது போல தெரிந்தாலும், அவன் எவ்வளவு மரியாதையோடு வாழ்ந்திருக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள உதவுகிறது. ஆனால், இவைகளெல்லாம், கடந்த காலக் கதையாக அவன் வாழ்க்கையில் மாறிவிட்டது.

ஆனால், இந்த நிலையிலும், யோபு சொல்லியிருக்கிறான், "என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்" என்று, என்னாலும், உங்களாலும் இப்படிச் சொல்ல முடியுமா? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!!

அன்பான வாசக நண்பரே! நம்முடைய உத்தமம் எந்தளவில் உள்ளது? உத்தமம் என்பது, பாவமே செய்யாத நிலை அல்ல. மாறாக, பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் ஓர் நிலை. யோபு தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், தன்னை பாவத்திலிருந்து விடுவித்துக் கொண்டு, தன் ஆவி பிரியுமட்டும் தன்னை உத்தமனாகக் காத்துக்கொண்டுள்ளான் என்று தெரிகிறது. நம்மில் எத்தனை பேர் நம்மை வேத வசனங்களினடிப்படையில், நம்மை பாவத்திலிருந்து விடுவித்துக் கொண்டு யோபுவைப் போல உத்தமர்களாகக் காத்து வருகிறோம்.

யோபுவின் உத்தமத்தைப் படித்துவிட்டு, ஆஹா என்று புகழ்வதால் நமக்கு எந்த நன்மையும் இல்லை. மாறாக, நானும் யோபுவைப் போல உத்தமனாக வாழ்வேன் என்று தீர்மானிக்க வேண்டும். தேவன் அதை நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

யோபுவைப் போல், ஓர் உத்தம வாழ்க்கை நாம் வாழ வேண்டுமானால், நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப் பாவத்திலிருந்து விடுதலையாக, முதலாவது, விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6). அடுத்து, மனந்திரும்ப வேண்டும். (2 கொரி.7:10) பிறகு, இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். (அப். 8:37). இறுதியாக பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டும். (அப். 22:16) இவைகளைச் செய்யும் போது, பாவத்திலிருந்து, விடுபட்டு இரட்சிப்படைவோம். இரட்சிப்பின் நிலை தான், உத்தம நிலை. பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திருக்கும் போது, உத்தம வாழ்க்கையை, யோபு போல நடத்துகிறவர்களாயிருப்போம்.

இந்த உத்தம வாழ்க்கைக்கு, சத்திய வசனங்களின்படி ஒப்புக்கொடுக்க உங்களை வேண்டுகிறேன். ஆமென்!

**குறிப்பு** : *ஏலகிரி வேதாகம முகாமில், ஆசிரியர் கொடுத்த செய்தியின் சுருக்கமே இக்கட்டுரை.*

**S. RAJANAYAGAM**

# "கர்த்தருடைய பந்தியில் நாம் ஏன் பங்கு பெறுகிறோம்"

கர்த்தருடைய பந்தி, இயேசுவும், அப்போஸ்தலர்களும் மேல் அறையில் கூடி பஸ்காவை புசித்த அந்த கடைசி இராபோஜனத்தை நினைவுப்படுத்துகிறது. எகிப்தில் சங்காரத் தூதன் வீடுகளில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசப்பட்டிருக்கிறதோ அந்த வீட்டை கடந்து போனான். அந்த நிகழ்வை கொண்டாடுவது தான் பஸ்கா பண்டிகை. (யாத் 12) அந்தப் பண்டிகை, புதிய ஏற்பாடு வந்ததினால் கடந்து போயிற்று. ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றும் கர்த்தருடைய ஜனம், கர்த்தருடைய பந்தியை நினைவு கூறுகிறது.

வேதாகமம் கூறுகிறது, "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சைப்பழ ரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மத்தேயு 26:26-30) என்று.

மாற்கு கூறுகையில், "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம் பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி; இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள் வரைக்கும் திராட்சைப் பழரசத்தை இனி நான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்" (மாற்கு 14:22-26) என்கிறார்.

லூக்கா கூறுகையில் "வேளை வந்த போது, அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி ; நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி; நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள். தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சைப்பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்கிறார்". (லூக்கா 22:14-20)

கர்த்தருடைய பந்தியை பற்றிக் கூறும் இந்த மூன்று பகுதிகளையும் படித்த நாம் கவனிக்க வேண்டிய அநேக காரியங்கள் உள்ளன. **முதலில்** நாம் கவனிக்க வேண்டியது, இயேசு பஸ்கா பண்டிகையை பயன்படுத்தி, தான் இவ்வுலகை விட்டு சென்ற பின் சீஷர்கள் கடைபிடிக்க வேண்டியதொரு பந்தியை அல்லது பண்டிகையை அறிமுகப்படுத்துகிறார். கர்த்தருடைய பந்தியிலிடம் பெறும் அப்பம் அவருடைய சரீரத்தின் அடையாளமாக இருக்கிறது. அவருடைய பாடுகளை நாம் நினைத்து அவ்வப்பத்தில் பங்கு பெற வேண்டும். பாத்திரம் அவருடைய இரத்தத்திற்கு, அதாவது திராட்சை ரசம் அவருடைய இரத்தத்திற்கு அடையாளமாக வைக்கப்பட்டிருக்கிறது. சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தை நினைத்து, மனிதனுக்கு மீட்பை உண்டு பண்ணின அத்திரு இரத்தத்தை நினைத்து நாம் அதில் பங்கு பெற வேண்டும்.

கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கு பெறும் போது ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்த வசனப்பகுதியில் பேசப்படும் அப்பத்தை நாம் சொல் அர்த்த ரீதியில் அப்படியே இது உண்மையில் இயேசுவின் சரீரம் என்றும், திராட்சை ரசத்தை இயேசுவானவரின் இரத்தம் என்றும் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. அதற்கு மாறாக, அந்த அப்பமும் திராட்சை ரசமும் நமக்கு நமதாண்டவரின் சரீரத்தையும், அவருடைய இரத்தத்தையும் நினைவுபடுத்த வேண்டும் அவ்வளவு தான். பஸ்காவின் பண்டிகையில் அதை கைக்கொள்ளும்போது, புளிப்பில்லாத அப்பமும், திராட்சை ரசமும் பயன்படுத்தப்பட்டது. இயேசு தன் அப்போஸ்தலரோடு இராபோஜன

மிருக்கையில் அதாவது இப்பஸ்காவை, புசிக்கையில், அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் கொண்ட தனது பந்தியை ஏற்படுத்தினபடியால் நாமும் இந்நூலில் அப்பந்தியை கைகொள்ளும்போது அவருடைய இரத்தத்தையும், மாம்சத்தையும் நினைவு கூறும்படியாக திராட்சை ரசத்திலும், அப்பத்திலும் பங்கு பெறுகிறோம்.

**இரண்டாவதாக,** இயேசு தனது சீஷர்களிடம் "நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள் வரைக்கும் திராட்சைப் பழ ரசத்தை இனி நான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்". (மாற்கு 14:25) இதன் பொருள் என்னவென்றால் இயேசு கிறிஸ்து காட்டிக்கொடுக்கப் படுவார், சிலுவையில் அறையப்பட்டு, இவ்வுலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்க தனது இரத்தத்தை அதில் சிந்தி, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் கல்லறை விட்டு உயிர்த்தெழுந்து சீஷர்களுக்கு காட்சி தந்து சில நாளைக்குப் பிறகு தன் பரம தந்தையிடம் திரும்புவார்.

தேவனுடைய ராஜ்யமாகிய சபை சில நாளைக்கு பின் எருசலேமில் ஸ்தாபிக்கப்படும், அங்கிருந்து உலகமெங்கும் அது பரவும். அது ஸ்தாபிக்கப்பட்ட பின் நாம் வாசிக்கிறோம், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்டுதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". (அப்போஸ் 2:42) இங்கு அப்பம் பிட்கப்படுதல் கர்த்தருடைய பந்தியை குறிக்கிறது. ஆனால், தேவனுடைய ராஜ்யத்தில் தன் சீஷரோடு தானும் பங்கு பெறுவதாக வாக்கு கொடுத்தார். அவர் சரீரப் பிரகாரமாக அவர்களோடு இருப்பதாக கூறாமல் தன் ஆவியில் அவர்களோடு இருப்பதாக கூறுகிறார். எங்கே, இரண்டு மூன்று பேர் என் நாமத்தினாலே கூடி வந்திருக்கிறீர்களோ, அங்கே அவர் இருப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார். (மத்தேயு 18:20) இவ்வுலகத்தின் முடிவு பரியந்தமும் நம்முடன் இருப்பதாக அவர் வாக்கு கொடுத்திருக்கிறார் (மத் 28:20) ஆகவே, கர்த்தருடைய சபை இருக்கிறது, கர்த்தருடைய ஜனம் அவருடைய பந்தியில் பங்கு பெறுகிறார்கள், அப்படி செய்யும்போது அவர் நம்மோடிருக்கிறார்.

இப்பொழுது Iகொரிந்தியர் 11:23-29 வரையில் உள்ள வசனப்பகுதியில் என்ன கூறுகிறது என்று பார்ப்போம் "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு; நீங்கள் வாங்கிப்

புசியுங்கள், இது உங்களுக்காகப்பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் அந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்.

மேற்கண்ட வசனப்பகுதிகளில் நாம் கவனிக்க வேண்டிய சில காரியங்கள் இருக்கவே செய்கிறது. **முதலாவதாக** கொரிந்துவில்லுள்ள கிறிஸ்தவர்களுக்கு கர்த்தரின் பந்தியை பற்றி தான் ஒப்புவித்தது கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டது என்று கூறுகிறார். **இரண்டாவதாக,** அப்பத்தை கர்த்தருடைய சரீரத்திற்கும், திராட்சை ரசத்தை கர்த்தருடைய இரத்தத்திற்கும் நினைவாக நாம் புசிக்கவும் பானம் பெறவும் வேண்டும். அவருடைய இரத்தம் கிறிஸ்துவின் பிரமாணத்தை அல்லது புதிய ஏற்பாட்டை பிரதிஷ்டை செய்யும்படியாக சிந்தப்பட்டது. **மூன்றாவதாக,** நாம் இதில் பங்கு பெறும் போதெல்லாம் அவர் வரும் வரைக்கும் கர்த்தருடைய மரணத்தை தெரிவிக்கிறோம். ஆனால், நாம் எப்பொதெல்லாம் அதில் பங்கு பெற வேண்டும்? அப் 20:7 ல் பவுல் துரோவா பட்டணத்தில் அப்பம் பிட்கும்படி கூடி வந்திருக்கிறார். அந்த உதாரணம் நமக்கு உண்டு. வாரத்தின் முதல் நாள் எத்தனை முறை வருகிறது. வாரத்திற்கு ஒரு முறை. ஆகவே, நாமும் வாரத்தின் முதலாம் நாளில் தான் அப்படி கூடி வர வேண்டும். இன்றைக்கும் அது பொருந்தும். நாம் வியாழக்கிழமை கூடி வரவோ, மாதத்தில் ஒரு முறையோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ கூடி வர நமக்கு அதிகாரமில்லை. அதற்கு மாறாக கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படி கூடி வந்திருக்கிறார்கள். ஆகவே, நாமும் அப்படியே கூடி வர வேண்டும்.

**நான்காவதாக,** நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது கிறிஸ்துவின் சிலுவைக்கு நம்மை கொண்டு போய், அவர் செய்த மகத்தான தியாகத்தை நாம் நினைவு கூறுகிறோம். நாம் இரட்சிப்பை பெறவும், நித்தியத்திற்கான நம்பிக்கையை பெற்றுக் கொள்ளவும் அவர் வழி வகுத்தார். நாம் அப்பம் பிட்கையில், கிறிஸ்துவின் விசுவாசம் வைத்திருப்பதையும் அவர் வரும் நாளை எதிர்நோக்கி இருப்பதையும் அது காட்டுகிறது. **ஐந்தாவதாக,** நாம் இந்த போஜனபந்தியில் அபாத்திரமாக பங்கு பெறுவோமானால், அதாவது உண்மை யற்றவர்களாக நடந்து கொண்டால், நாம் கிறிஸ்துவின் மாம்சத்தைக் குறித்தும், இரத்தத்தை குறித்தும் குற்றமுள்ளவர் களாயிருப்போம். இன்னொரு வகையாக அதைச் சொன்னால், நாம் கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாக பங்கு பெற்றால் நமக்கு நாமே அழிவை வருவித்துக் கொள்ளுகிறோம்.

**இறுதியாக,** நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது, நம்மை நாமே பரிசோதித்துப் பார்த்து அதில் பானம் பண்ண வேண்டும். அதாவது தேவனுக்கு முன்பாக நமது வாழ்வும் இதயமும் நேர்மையாகவும், உண்மையாகவுமிருக்க வேண்டும். நாம் கர்த்தருக்கு உண்மையாக இருக்க நம்மால் முடிந்த வரையில் செயல்படும்போது தான் நாம் அதில் பங்கு பெற வேண்டும். நாமே நம்மை பற்றி சரியான ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்றால், அதாவது நமது மனதில் நாம் கர்த்தரை பின்பற்றுவதை பற்றி சந்தேகம் எழுமானால் நாம் மனந்திரும்பி பின் தான் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? இல்லையென்றால், சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து, கடந்த கால பாவங்களை விட்டு மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். (ரோமர் 10:17, அப்போஸ் 2:38, மாற்கு 16:16) நீங்கள் கிறிஸ்தவராக இருப்பீர் என்றால் தொடர்ந்து தேவனை ஆராதியுங்கள். கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுங்கள். இறுதி வரை நிலைத்திருங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென் !

**J.C. CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# "சாறிபாத் விதவை"

பழைய ஏற்பாட்டிலுள்ள ராஜாக்களின் புஸ்தகம் பதினேழாம் அதிகாரத்தில் ஒரு புறஜாதிப் பெண் ஒளிந்திருக்கிறாள். அவள் வாழ்ந்த காலம் இஸ்ரவேலை ராஜாக்கள் ஆண்ட காலம். இஸ்ரவேலை சில நல்ல ராஜாக்கள் ஆண்டிருந்தாலும் இவளுடைய நாட்களில் இஸ்ரவேலை ஆண்ட ராஜா மிகப் பொல்லாதவன். தெய்வ பயமில்லாத தன் மனைவியின் சொல்லுக்கு மண்டியிட்டு இஸ்ரவேலை அந்நிய தேவர்களை நோக்கி வழிநடத்தினான். ஒரு கட்டத்தில் தேவன் தன்னுடைய மகிமையை இஸ்ரவேலுக்கு காட்ட விரும்பி தீர்க்கதரிசிகளிலே சிறப்பிடம் பெற்றவனாகிய எலியாவை இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடம் பேசும்படியாக அனுப்பினார்.

.......எலியா ஆசாபை நோக்கி, "என் வாக்கின்படியேயன்றி இந்த வருஷங்களிலே பனியும், மழையும் பெய்யாதிருக்குமென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான். (1ராஜாக்கள் 17:1) அவனுடைய வாக்கின்படியே தேசத்திலே மழைபெய்யாமல் கடுமையான பஞ்சம் வந்தது. புதிய ஏற்பாட்டு ஆசிரியராகிய யாக்கோபு தன்னுடைய நிருபத்தில் இவ்வாறாக எழுதியுள்ளார். எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழைபெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும், ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லை. (யாக். 5:17)

ஆனால் எந்நிலையிலும் தன்னுடைய உண்மைப் பிள்ளைகளை கைவிடாத நமது, தேவன் அப்பொழுது ஏற்பட்ட கடுமையான பஞ்சத்திலிருந்து தமது தாசனைக் காப்பாற்ற விசேஷித்த ஏற்பாட்டைச் செய்தார். அவனைக் கேரீத் ஆற்றண்டைக்கு போகச் சொல்லி, பறவைகளிலே அற்பமாய் எண்ணப்படும் காக்கையைக் கொண்டு இரண்டு வேளையும் சிறப்பாக போஷித்தார். இரண்டு வேளையும் நிம்மதியாக சாப்பிட்டு ஆற்றுத் தண்ணீரை குடித்து நாட்களை கழித்து வந்தான்.

தொடர்ந்து மழையில்லாமல் போனபடியால் மழையை நம்பி ஓடிவரும் ஆற்றிலும் தண்ணீர் வற்றி விட்டது. அந்நிலையில் தன் பிள்ளையைப் பட்டினிபோட விரும்பாத தேவன் அவனுடைய சரீரத் தேவைகளை சந்திக்க ஒரு திட்டம் தீட்டி புறஜாதிப் பட்டணமாகிய

சாறிபாத்துக்குப் போக பணித்தார். கர்த்தருடைய வார்த்தைக்கு தன்னை ஒப்புக் கொடுத்த எலியா கர்த்தரின் கட்டளைப்படியே அங்கு சென்ற பொழுது தான், மரித்து நூற்றாண்டுகள் பல ஆகியும் இன்னும் பேசிக் கொண்டிருக்கும் விதவையை சந்திக்கிறான். வேதாகமத்தில் அவளுடைய பெயர் இடம் பெறுவதற்கு கூட தகுதியில்லாதவளாக அன்றைக்கு அவள் இருந்துள்ளாள்.

அந்த சிறப்பான ஸ்திரீயோடு எலியா செய்த உரையாடல் விசேஷமானது. முற்றிலும் அறிமுகமில்லாத சற்றும் சம்மந்தமில்லாத இருவருக்கு நடந்த உரையாடல் அது. தேவன் தனக்காக யாரை ஆயத்தம் செய்து வைத்திருக்கின்றார் என்று தெரியாத நிலையில், நீண்ட தூர நடைப்பயணத்தால், விடாய்த்துப் போன நிலையில் இங்கே ஒரு சந்திப்பு ஏற்படுகிறது.

அப்பொழுது அந்த ஸ்திரீயினுடைய நிலையோ இன்னும் மோசமானது. அவள் ஒரு விதவை இந்நாட்களில் இருப்பதைப் போல் ஓய்வூதியமோ, முதியோர் காப்பகங்களோ, இன்னும் அரசாங்கத்தால் கிடைக்கும் சில பாதுகாப்புகளோ அப்பொழுது இல்லை. கடுமையான பஞ்சம், தன்னையும், தன் மகனையும் காப்பாற்ற முடியாத நிலையில் சாவின் எல்லைக்கு அவள் வந்துவிட்டாள். அவளுடைய வார்த்தையின்படி அந்த நாள் தான் அவள் பூமியில் உயிரோடிருக்கும் கடைசி நாள் (1இராஜா 17:12)

இந்தப் பின்னணியில் தான் சந்திப்பு ஆரம்பமாகிறது. எலியா அங்கே தயங்கி, தயங்கி முதலில் தண்ணீர் கேட்கிறான் (வசனம் 10) அவள் தண்ணீர் கொண்டு வர காலடி வைத்தபொழுது கொஞ்சம் அப்பமும் உன் கையிலே கொண்டுவா என்று கேட்டான். "அதற்கு அவள், பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமேயல்லாமல் என்னிடத்தில் அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். இதோ, நானும், என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போக அதை எனக்கும், அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்" (வசனம் 12)

அப்பொழுது எலியா அவளைப் பார்த்து, **"பயப்படாதே, நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா பின்பு உனக்கும், உன் குமாரனுக்கும் பண்ணலாம்** (வ.13) அது மாத்திரமல்ல எலியா, தொடர்ந்து அப்படிச் செய்தால் பானையின் மா செலவழித்து போவதுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து

போவதுமில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். இஸ்ரவேலின் தேவனுடைய கர்த்தர் சொல்லுகிறார் என்று எலியா சொன்ன வார்த்தைகளை நம்பி அந்தச் சூழ்நிலையில் அவள் செயல்பட்டு பஞ்சம் தீருமட்டும் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்கிறாள் (வச. 14,15) கர்த்தர் சொன்னபடியே பானையிலே மா செலவழிந்து போகவுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை, அவளுக்கு ஆசீர்வாதம் இரண்டு மடங்காக அல்ல, பல மடங்காக கொடுக்கப்பட்டதென்று நாம் அறிகிறோம்.

பெயர் எழுதப்படக்கூட தகுதியில்லாத இந்த புறஜாதி விதவை, சாவின் விளிம்பிலே நின்ற பொழுது ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்ட விதவை, 20ம் நூற்றாண்டின் இறுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களாகிய நமக்கு சில அற்புதமான பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறாள்; கற்றுக்கொள்வோமாக!

**முதலாவது,** இவள் ஒரு புறஜாதிப் பெண்ணாக இருந்த பொழுதும் அந்நியரை உபசரிக்க வேண்டுமென்ற நற்குணம் பொருந்தியவளாக இருந்துள்ளாள். எலியா இவளிடத்தில் வந்த பொழுது அவனுடைய ஒட்டு மொத்த தோற்றமே வித்தயாசமானதாக இருந்திருக்கும். ஏனெனில் அவன் வசித்தது காட்டுக்குள் அவன் உடுத்தியது தோல் உடை இன்னும் சில வேறுபாடுகள் அவனிடத்தில் இருந்தது. சரீரம் அப்பொழுது இவளுடைய நிலையோ சாவை ருசிபார்க்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அந்நிலையிலும் இவள் அந்நியரை உபசரித்துள்ளாள். இஸ்ரவேலின் தேவன் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன் என்று எலியா வாக்குக் கொடுத்த போது அந்த இஸ்ரவேலின் தேவனைப் பற்றி இவளுக்கு அதிகம் தெரியாது.

ஒருவேளை நாமாக இருந்தால் என்ன எண்ணியிருப்போம். நம்மை தந்திரமாக ஏமாற்றி, இருப்பதை பிடுங்கி தின்னலாம் என திட்டமிடுகிறான் என நினைத்திருப்போம். இவனிடம் பேசினால் வம்பு என வேகமாக நடந்திருப்போம். ஆனால் இந்த ஏழை விதவையோ அந்த நிலையிலும் உபசரித்துள்ளாள். அதன் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டுமுள்ளாள். நாமும் கூட நம் வாழ்க்கையில் மற்றும் குறைவில் இருக்கிறவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களாக, உபசரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். வேதாகமம் இக்குணத்தை பெரிதும் வரவேற்கிறது. எபிரேய ஆசிரியர் என்ன கூறுகிறார் என்று பாருங்கள் "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் அதினாலே சிலர் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" (எபி 13:2)

**இரண்டாவதாக,** பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யக்கூடிய மக்களாக இருக்க வேண்டும். அதுவும் முதலிலே அவர்களுடைய சரீரத் தேவைகளை சந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும். எலியாவை இவள் ஏதோ ஒரு விதத்தில் தேவனுடைய மனுஷன் என்பதை அறிந்து கொண்டாள். ஆகையால் தன்னுடைய தேவையைக் காட்டிலும் அந்த தேவ மனிதனின் தேவையைச் சந்திப்பது முதன்மையானது என எண்ணினாள். **அவன் முதல் எனக்கு ஒரு அடையைச் செய்துவா என்று சொன்னபோது அப்படியே செய்தாள்.** அதன் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டாள்.

இயேசுக் கிறிஸ்து இந்த பூமியில் இருந்த போது "சீஷன் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 10:24) ஆகவே நாமும் நம்முடைய வாழ்க்கையிலே இந்த விதவையைப் போல தேவனுடைய உண்மைப் பிள்ளைகளைக் கண்டறிந்து அந்த பரிசுத்தவான்களுக்கு உதவி செய்வோமானால் அந்த விதவையையும், அவள் வீட்டாரையும் ஆசீர்வதித்த பரலோகத்தின் தேவன், நம்மையும், நம் குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பார் என்பதிலே எந்த சந்தேகமும் வேண்டாம்.

**மூன்றாவதாக,** கர்த்தரை நம்புகிற பிள்ளைகளுக்கு கடைசி நிமிடத்திலே கூட ரட்சிப்பு உண்டு என்பதை இந்த விதவையின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அவள் விறகு பொறுக்கினபொழுது இன்றைக்கு சாப்பிடுவதுதான் கடைசி ஆகாரம் என நினைத்தாள். ஆபிரகாம் ஈசாக்கை பலியிட்ட பொழுது கத்தி பிள்ளையாண்டான் மேல் படவில்லையேயொழிய ஆபிரகாமின் மனதிலே ஈசாக்கை பலியிட்டு விட்டான். அதைப் போல இந்த விதவை சாகவில்லையே ஒழிய, சாவை ருசி பார்த்து விட்டாள். அந்த நிலையிலும் கர்த்தருடைய மனிதனின் வார்த்தைகளை நம்பினாள் காப்பாற்றப்பட்டாள்.

இதைத்தான் சங்கீதக்காரன் சொல்லும்பொழுது, நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர் உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும் என்று. ஆகவே நாம் நம்முடைய வாழ்க்கையில் இதற்குமேல் இனி என்ன நடக்கப்போகிறது இனி யாரால் நம்மைக் காப்பாற்ற முடியும் என்று நினைக்காமல் இறுதி மூச்சுவரை தேவனுக்கு உண்மையாக இருப்போம் என்றால், அவருக்குப் பயந்து நடப்போமானால் நாம் காப்பாற்றப்படுவது திண்ணம் ஆசீர்வதிக்கப்படுவது உறுதி.

இறுதியாக அவள் இவ்விதமாக ஆசீர்வதிக்கப்பட்டதற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்கிறதை மறந்துவிடக் கூடாது. 17ம் அதிகாரம் 15ம் வசனம் இவ்விதமாகச் சொல்லுகிறது அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள். அவளுடைய ஆசீர்வாதத்திற்கான தாரக மந்திரம் இதுதான். ஆம் அவள் எலியாவின் சொற்படி செய்தாள். அன்றைக்கு எலியாவின் வாக்கு அவளுக்கு வேதவாக்கு. அந்த வார்த்தைகளுக்கு அவள் கீழ்ப்படிந்தாள். ஆசீர்வதிக்கப்பட்டாள்.

இன்றைக்கு நாம் எதற்கு கீழ்ப்படிய வேண்டும்? அன்றைக்கு அந்த விதவைக்கு தேவனுடைய வார்த்தை கையிலே இல்லை இன்று பரிசுத்த ஆவியானவராலே கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளடங்கிய வேத புத்தகம் நம்மிடம் உண்டு. நாம் ஆசீர்வதிக்கப்பட அந்த வார்த்தைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

ஆனால் அநேகர் தேவனுடைய வார்த்தையை ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு மனிதனால் இயற்றப்படும் கோட்பாடுகளுக்கும், உணர்வுகளுக்கும், கட்டுக்கதைகளுக்கும் செவி கொடுக்கின்றனர். ஆனால் இயேசுக் கிறிஸ்து தன் மலைப்பிரசங்கத்தில் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனை கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" என்று கூறியுள்ளார். (மத். 7:24)

இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளைகளே, "**சாறிபாத் ஊர் விதவை**" நமக்கு எல்லா வகையிலும் சிறந்த முன்மாதிரியாய் இருக்கிறாள். இஸ்ரவேலின் தேவன்மேல் அவ்வளவு அசைக்க முடியாத நம்பிக்கை வைக்கிறாள். நாமும் கூட அவளைப்போல் தேவன் சொற்படி செய்து குடும்பமாக ஆசீர்வாதத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவிப்போம். தேவனின் ஆசீர்வாதமானது விசேஷித்த ஒன்று. நம்முடைய கண்களுக்கு அது ஆச்சரியமாகத்தான் தோன்றும்.

விசேஷமாக குடும்பத்தின் முக்கிய பங்கை வகிக்கும் பெண்களாகிய நாம் முற்றிலும் அவருக்கு கீழ்ப்படிந்து அவர் சொன்னபடி செய்து அளவில்லாத ஆசீர்வாதத்தை நமக்கும் நம் கணவருக்கும், நம் அருமைப் பிள்ளைகளுக்கும் பெற்றுத்தருவோம். அவ்வாறு செய்ய பிதாவாகிய தேவன் தம் குமாரன் மூலமாக நமக்கு முழு பெலனையும் விசுவாசத்தையும் கட்டளையிடுவாராக!!

***ரேச்சல் ராஜநாயகம்***

வாலிபர் பகுதி

# வாலிபனே எழுந்திரு

இளநீலக் கடல்தனிலே ஓயாது அலைகள் எழுந்து கரைதனை தொடும், கரையினைத் தொட்டு விட்டக் களிப்பினிலே ஆழிக்குள் மீண்டுமது ஆனந்தமாய் செல்லும், வாரிதி நடுவேயிருந்து வானத்தில் ஒளி வீச, வையகத்தின் இருள் நீக்க, இளம்பரிதி கிழக்கே உயர்ந்தெழும். பகலவன் இப்படி எழுவது கண்டு, துயில் கொண்ட மனித இனம், ஓய்வு முடித்து உழைக்கயெழும், அப்படி உழைக்கயெழும் மனித குலம் இறைவன் உருவாக்கிய இயற்கையை ரசிக்கும்போது நல்ல சிந்தனைகள் பல உள்ளத்தில் எழும், சில எழுத்து வடிவம் பெற்று உயர்ந்தவைகளாய் எழுந்து நிற்கும். ஓர் இசை கலைஞனின் வாத்தியத்திலிருந்து இன்னிசை நாதமெழும். ஒரு பாடகனின் குரல் வளையிலிருந்து வளமான கீதமெழும். உலகில் இத்தனை எழுச்சியிருந்தாலும், மனித குலத்தை குலை நடுங்கவைக்கும் மரணத்தை ஜெயித்து எழுந்தாரே மனிதகுல மாசு நீக்க மனு அவதாரமெடுத்த நமதாண்டவர், அந்த எழுச்சிக்கு எதுவும் ஈடாகாது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கர்கள் எல்லாம் நம்முடைய இரட்சிப்பை பற்றி கருத்தாய் ஆராய்ந்திருக்கிறார்கள், தேவனோடு இருந்த உறவை இழந்த மனுக்குலம் அதை எப்படி பெற்றுக்கொள்ளப் போகிறது என்பதை அவர்கள் நமக்காக எழுதினார்கள். மண்ணுக்குள் மறைந்து போகும் மனிதனின் உடல் மீண்டும் எழுப்பப்படும் என்று குரல் எழுப்பினான் தீர்க்கன் தானியேல் (12:2) புதிய ஏற்பாட்டில் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலன் பவுல் எழுதுகையில், கிறிஸ்து எழுந்திராவிட்டால்..... மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்? (1கொரி 15:16-35) என்று கேள்வி எழுப்புகிறார். ஆக! எனக்கன்பான வாலிபர்களே! நாம் மரித்தபின்னும் எழுந்திருக்கப் போகிறோம், ஆனால் அதற்கு ஆதாரமே நமதாண்டவர் மரணத்தின் கூரை ஒடித்து ஜெயித்தெழுந்தது தான் என்பதுறுதி.

## தாய்க்கு ஓரே மகன்

நெடுநாள் மழையில்லாததால் குவலயத்து மக்களோடு மண்ணும் சேர்ந்து வெடித்து, வையகம் செழிக்க மாரிமழை பொழியுமென ஏங்குகின்ற சமயத்தில், மழை பொழிந்து மக்களினத்தை வாழ வைப்பது போல், காலம் நிறைவேறின போது கன்னியின் கருவில் உருவாகி மாணிக்க தொட்டிலிக்கு அமையாத பெருமையெல்லாம் முன்னணைக்கு கொடுத்து இப்புவியில்

உதித்த நமதாண்டவர், சற்றொப்ப தனது முப்பதாவது ஆண்டில் காரிருள் நீக்கி கதிரவன் உதிப்பது போல் ஊழியப்பாதையை துவக்கலானார்.

இயேசு பிரானின் ஊழியப் பாதையில் ஒருநாள், அவர் நாயீன் எனும் ஊருக்கு அருகில் வந்து கொண்டிருந்தார், அவரோடு திரளான மக்கள் வெள்ளம், எதிர்புறத்தில் ஒரு கூட்டம் வாலிபன் ஒருவன் மூச்சித்துப் போனதால், பாடையைச் சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். **போருக்குப் புறப்பட்ட படைகள் ஒன்றொடொன்று மோதிக் கொள்வது போல ஜீவனும், மரணமும் சந்தித்தது**. மரணத்தின் அதிபதியாகிய பிசாசு, இதோ இவன் என் கையில், உம்மால் முடிந்ததைப் பாரும் என்று சவால் விடுவது போல அச்சந்திப்பிருந்தது. அடக்கம் பண்ணும்படும்படி கொண்டு வரப்பட்டவன் தன் தாய்க்கு ஒரே மகன், அத்தோடு விவிலியம் விளம்புவதை கவனியுங்கள், அவன் தாயோ கைம்பெண்ணாயிருந்தாள். (லூக்கா 7:11,12)

நமதாண்டவர் அவளைப் பார்கிறார், தன் வாழ்க்கையில் இரண்டாவது முறையாக மரணம் இவளை தாக்கியிருப்பதைக் கண்டார். தன் கணவனை, முதலில் இழந்தாள் அப்பொழுதாவது, தான் வடித்த கண்ணீரை துடைக்க தன் மகனிருந்தான், வாய்விட்டு அழும்போது வாயார ஆறுதல் சொல்ல அவன் அருகிலிருந்தான், ஆனால் எந்த கை தன் கண்ணீரை துடைத்ததோ அந்த கை அசைவற்றுக் கிடக்கிறது, எந்த நாவு தனக்கு ஆறுதல் சொன்னதோ அந்த நாவு இப்போது வாயிக்குள் சுருண்டு கிடைக்கிறது. என்ன செய்வாள் இத்தாய்! தான் கண்மூடும் வரை தன்னோடிருப்பான், தன்னை காப்பாற்றுவான் என நம்பியிருந்தவனை மண் மூடப்போகிறதே என நினைத்தால், ஐயகோ ! அவளாள் தாங்க முடியவில்லை.

தாங்கொண்ணா துயரை சுமந்த அத்தாயைப் பார்த்து நமதாண்டவர் மனதுருகினார், "**அழாதே**" என்று அன்போடு கூறினார். பாடையின் கிட்டவந்து அதைத் தொட்டார். சுமந்தவர்கள் நின்றார்கள். பொதுவாக சவத்தை கொண்டு போகிற யூதர்கள் அதை அடக்கம் செய்வதை புனிதச் செயலெனக் கருதுவர், அதை தடுப்பதிற்கு அனுமதி மறுப்பர், ஆனால் இங்கே நிலைமை தலைகீழ் இயேசுவின் குரலையும், முகத்தின் ஒளியையும் கண்டு அப்படியே நின்று போய்விட்டார்களோ! தெரியவில்லை, ஆனால் நின்றார்கள். **அப்பொழுது தான் அகிலம் படைத்தவர், "வாலிபனே எழுந்திரு" என்றார், உறங்கியபின் விழிப்பவன்போல் அவன் எழுந்தான், வாய் மொழிந்தான் ஆண்டவர் அவனைத் தாயிடம் ஒப்படைத்தார்.** (லூக் 7:13,14)

பாலைவனமாய் போன அவளின் வாழ்வில் இப்படி ஒரு சோலை முளைக்கும் என எதிர்பார்த்திருக்கமாட்டாள். அந்த வாலிபனின் தாய் தன் விழிகளையும், செவிகளையும் கொஞ்ச நேரம் நம்பியிருக்க மாட்டாள் என

எண்ணுகிறேன். எத்தனையாய் குதுகலித்தாளோ தெரியவில்லை, இயேசுவுக்கு நன்றிகள் பல நவில்திருப்பாள் என நம்புவதில் தவறேது மில்லை. எனக்கன்பான வாலிபர்களே ! அந்த வாலிபன் சரீரத்தில் மரித்திருந் தான், அவனை இயேசு எழுப்பினார், அதுபோலவே நாம் பாவத்தினாலும், அக்கிரமத்திலும் ஆவிக்குரிய ரீதியில் மரித்த நிலையிலிருந்தோம். (எபே. 2:1), அந்நிலையை மாற்றுவதற்காக மனு உருவம் எடுத்த அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியத்தின்படி மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார். அவர் எழுந்தபின் தான் நம்மை எல்லாரையும் பார்த்து "வாலிபனே எழுந்திரு" என்கிறார்.

நாம் அவரோடு எழுந்திருக்க வேண்டுமானால் அவரோடு ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்பட வேண்டும் (ரோம 6:3) அப்படி நாம் செய்யும் போது, அந்த தாயைப் போலவே நாமும் இழந்துபோன ஆசீர்வாதத்தையும் நம்பிக்கையையும் திரும்ப பெற்றுக்கொள்கிறோம்.

நமது ஆண்டவர் அத்தாயின் வாழ்க்கையின் நிலையை முழுமையாக மாற்றினது போல், நம்முடைய வாழ்க்கையில் நாம் அவரை ஆவிக்குரிய ரீதியில் சந்திக்கையில், நம் வாழ்க்கையையும் தலைகீழாக மாற்றுகிறார், அப்போஸ்தலன் பவுல் கூறுகையில், "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின; எல்லாம் புதிதாயின" (கொரி 5:17) என்கிறார். ஆகையால், நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்தின் மூலமாக வந்து, அவருடன் இறுதிவரை நிலைத்திருப்போம், ஒருவேளை கிறிஸ்துவின் வருகைக்கு முன் நாம் வயதாகி மரித்து அடக்கம் பண்ணப்பட்டாலும், நம்மை பார்த்து கர்த்தருடைய நாளில் "எழுந்திரு" என்று நமது ஆண்டவர் சொல்லி நம்மை பரலோக பாக்கியத்திற்குள்ளாக அழைத்துச்செல்வார், ஜீவகிரீடத்தைத் தருவார்! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**

## எப்படிப்பட்ட இருதயம் இருக்கக்கூடாது

1. **நீதி 6:18 → துராலோசனையைப் பிணைக்கும் இருதயம் இருக்கக்கூடாது.**
2. **நீதி 11:20 → மாறுபாடுள்ள இருதயம் இருக்கக்கூடாது.**
3. **நீதி 12:20 → தீங்கைப் பிணைக்கும் இருதயம் இருக்கக்கூடாது.**
4. **நீதி 14:14 → பின்வாங்குகிற இருதயம் இருக்கக்கூடாது.**
5. **நீதி 28:14 → கடினமுள்ள இருதயம் இருக்கக்கூடாது.**

சிறுவர் பகுதி

# லிவியாதானிடமிருந்து ஒரு பாடம்




விடுமுறை நாட்களை விளையாடிக் கழித்துக்கொண்டிருக்கிற எனக்கு மிகவும் பிரியமான சிறுதம்பி, தங்கைகளே! உங்கள் அனைவருக்கும் நமது ஆண்டவரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துதல் சொல்லுவதில் மகிழ்ச்சியடைகிறேன். சர்வ வல்லமையுடைய நமது தேவன் நாம் பார்ப்பதையும், பார்க்க முடியாததையும் உண்டாக்கினார் என்பது நாம் அறிந்த ஒன்றே. அவர் சிருஷ்டித்த ஒரு சிருஷ்டியிடமிருந்து இம்முறை நாம் ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளுவோமா!

சிங்கம்! புலி!! கரடி!!! என்ற மிருகங்களின் பெயரைக் கேட்டவுடன் உங்கள் மனதில் என்ன நினைக்கிறீர்கள். அவைகள் எத்தனை பெலமுள்ளதாயும், எவ்வளவு ஆபத்துள்ளதாயும் இருக்கிறது என்று எண்ணுகிறீர்கள்! அப்படித்தானே! நீங்கள் நினைப்பதில் எந்த தவறுமில்லை இவைகள் பெலமும், ஆபத்தும் நிறைந்தவை தான். ஆனால் வேதாகமம் இவைகள் அனைத்தையும் விட மிக பெலமும், ஆபத்தும், பயங்கரமுமான மிருகத்தைப் பற்றி சொல்லுகிறது. அதன் பெயர் லிவியாதான்.

இந்த பயங்கர மிருகத்தைப் பற்றி தேவன் யோபுவின் புத்தகம் 41ம் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அதின் தோல் மிக பெலம் வாய்ந்ததாகயிருந்தது, ஈட்டியும், அம்புகளும் அதை ஒன்றும் செய்ய முடியாது. அது எழும்பும் போது கடலை கலக்கி, ஆழத்தை உலைப் பானையைப் போல் பொங்கப்பண்ணுமாம்! அப்பாடி! வேதம் சொல்லுகிறது அதின் வாயிலிருந்து நெருப்புப் புறப்படுமாம் (யோபு 41:18-21) யோசிப்பதற்கே பயமாயிருக்கிறதல்லவா?

லிவியாதானின் வாயிலிருந்து நெருப்பு புறப்பட்டிருக்குமா? எனதருமை சிறுவர்களே! நாம் இன்றைக்கு பார்க்கிற மின்மினிப் பூச்சியினால், இரவில் ஒளியை உண்டாக்க முடிகிறதே! அது எத்தனை ஆச்சர்யம். இன்னும் சில பூச்சிகளை நீங்கள் நசுக்கினால் உங்கள் மூக்கை நீங்கள் மூடிக்கொள்ள வேண்டியதிருக்கும். அத்தனை வாய்வு அதன் உடலுக்குள் இருக்கிறது. அதுபோலத்தான் லிவியாதானும் கடலில் தன்

ஆகாரத்தை உட்கொள்ளும் இம்மிருகம் சில சிறுகற்களை தன் பற்களின் இடையில் சேர்த்துக்கொள்ளும், அது ஒன்றோடு ஒன்று உராயும்போது பொறி கிளம்பும் தன்னிடத்திலிருக்கும் வாய்வை மூக்கின் வழியாய் விட அது பழகி இருக்கிறபடியால், அதின் விளைவாகத் தான் நாம் நெருப்பைப் பார்க்கிறோம். உண்மையில் இது ஒரு பயங்கர மிருகம் தான்.



மனிதர்களால் அடக்க முடியாத பெலமுள்ள மிருகமாக இது இருந்திருக்கிறது (யோபு 41:1-6) ஆனால் தேவன் யோபுவிடம் கூறுகையில், "வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவைகள்" என்கிறார். (யோபு 41:11) இத்தனை பெலம் வாய்ந்த மிருகம் தேவனின் கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கிறது. அதினால் தான் யோபு, "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்" என்று கூறுகிறார். லிவியானதானைவிட பெலம் வாய்ந்த மிருகமானாலும் அதை நீர் கட்டுப்படுத்துவீர்.

நீர் அவ்வளவு பெலம் வாய்ந்தவர் என்பதை யோபு உணர்ந்து கொண்டார். நாமும் கூட இவ்வுலகத்தை தேவன் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என கற்றுக்கொள்வோம். விடுமுறையை பயன் உள்ள நாட்களாக கழியுங்கள். அடுத்த மாதம் சந்திப்போம்! ஆமென்.

*R. Abel Rodger Nayagam*

## கர்த்தருக்குப் பிரியம்

a) **நீதிமொழி 21:3 → நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்.**

b) **நீதி 12:22 → உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.**

c) **நீதி 15:8 → செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்.**

d) **எபிரெ 13:16 → நன்மை செய்வதும், தான தர்மம் செய்வதும் தேவனுக்குப் பிரியம்.**

e) **I தீமோ 2:1-3 → எல்லோருக்காகவும் ஜெபம் செய்வது தேவனுக்குப் பிரியம்**

## இரட்சிக்கப்பட்டவர்களை புதிய ஏற்பாடு எப்படி அழைக்கிறது

i) "சீஷர்கள்" என்று அழைக்கிறது. [அப்போஸ் 11:26]

ii) "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கிறது [அப். 11:26, 26:28, 1பேது 4:16]

iii) "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கிறது. [ரோ. 1:7, எபே. 1:1, பிலிப். 1:1]

iv) "தேவனுடைய பிள்ளைகள்" என்று அழைக்கிறது. [ரோ. 8:16, எபே. 5:8, 1 யோ 3:10]

v) "சகோதரர்கள்" என்று அழைக்கிறது. [1பேதுரு 2:17, பிலிப். 4:21]

vi) "ஊழியர்கள்" என்று அழைக்கிறது. [ரோமர் 16:12]

vii) "ஆசாரியர்கள்" என்று அழைக்கிறது. [1பேது 2:5,9, வெளி 1:6]

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் வேத வசனங்களைப் படித்ததன் மூலமாக நாம் முழுக்கு ஞானஸ்நானம் பெறும்போது தேவன் தம்முடைய குமாரனின் இரத்தத்தினால் நம்முடைய கடந்த காலப் பாவங்களைக் கழுவுகிறார் என்ற நித்திய உண்மையை தேவன் நமக்கு வெளிப்படுத்தினார். இங்கே ஒரு இயற்கையான கேள்வி எழும்புகிறது.

VII நாம் ஞானஸ்நானம் பெற்ற பிறகு பாவம் செய்தால் என்ன நடக்கும்? அதை நிவர்த்தி செய்ய ஏதாவது வழி வைத்திருக்கிறாரா?

முதலாவது நாம் கிறிஸ்தவர்களானப் பிறகு நாம் பாவம் செய்தால் நாம் மோசமானவர்களா? நம்முடைய பாவம் தேவனையும் அவருடைய குமாரனையும் எவ்வளவு புண்படுத்துகிறது என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்க தேவன் எப்பேற்பட்ட கிரயத்தை செலுத்தினார் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

## I பேதுரு 1:18,19

ஒரு கிறிஸ்தவன் அழிவுள்ள வஸ்துக்களாகிய பொன்னினாலோ, வெள்ளியினாலோ மீட்கப்படுவதில்லை அதற்குப் பதிலாக நாம் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்படுகிறோம். நாம் பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்படுகிறோம். நாம் மாம்சத்தில் இருப்பதினால் அவ்வப்போது பாவத்தில் விழுவோம் என்பதை தேவன் நன்றாக அறிவார் ஆனால் அதை நாம் ஒருசாக்குபோக்காக வைத்துக்கொண்டு பரிசுத்த ஜீவியம் வாழ்வதற்கான பொறுப்புகளிலிருந்து நாம் நம்மை தவிர்த்துக் கொள்ள முடியாது.

ரோமர் 3:23யை வாசியுங்கள் நாம் ஒவ்வொருவரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகிறோம். I யோவான் 1:8ல் நாம் வாசிக்கும்போது நமக்கு பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர் களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

தேவன் நம்மை நன்றாக அறிந்திருக்கிறபடியால், நம்மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருப்பதினால், அவருடைய நிபந்தனைகளுக்கு நாம் உட்பட்டிருந்தால் தொடர்ந்து நமக்கு அவர் பாவமன்னிப்பை அளிக்கிறார்.

I யோவான் 1:7யை வாசியுங்கள் தேவனிடத்திலிருந்து எவ்வளவு அழகான வாக்குத்தத்தம் அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். உண்மையிலேயே அந்த இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கிறது. ஒளியில் நடப்பது என்பது நாம் தேவனுடைய வசனத்திற்கேற்ப வாழ்வதாகும்.

தேவனுடைய வசனம் நம் கால்களுக்குத் தீபமும், நம் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம் 119:105) அப்போஸ்தலருடைய நடபடிகள் 8:22யை வாசியுங்கள் இதில் தேவனுடைய வசனமாகிய ஒளியில் நடத்தலில் நிபந்தனைகளின் ஒரு பகுதியைப் பார்க்க முடியும் இதில் தெளிவான ஒரு காரியம் என்னவென்றால் நாம் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள நாம் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். I யோ 1:9ல் நாம் வாசிக்கும்போது நம்முடைய பாவங்களை தாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

நாம் ஒளியில் நடப்பதினால், பாவங்களிலிருந்து மனந்திரும்புவதினால், தேவனிடத்தில் பாவங்களை அறிக்கை செய்வதினால், இயேசு கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நமக்கு பாவமன்னிப்பு அளிக்கப்படுகிறது. எனவே ஒருவர் தன்னுடைய கடந்த கால பாவத்தின் ஆரம்ப மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறும்போது அவர் பாவம் செய்யும் போதெல்லாம் அவர் ஞனாஸ்நானம் பெற அவசியமில்லை.

வஞ்சிக்கப்படாதிருங்கள். நாம் பாவத்தோடு தொடர்ந்து போராட வேண்டும். I பேதுரு 5:8யை வாசியுங்கள் அதில் தேவன் இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் நம்முடைய எதிராளியை தேவன் நமக்கு அடையாளம் காட்டுகிறார். அவன் சாத்தான். தேவன் சாத்தானை எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிற சிங்கமாக விளக்குகிறார்.

நமக்கு இப்படி ஒரு மோசமான கொடூரமான எதிராளி இருப்பதால் நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும், என்று தேவன் நம்மை எச்சரிக்கிறார். இதேபோல இயேசு பேதுருவையும் எச்சரித்தார் லூக்கா 22:31ல் நாம் வாசிக்கும் போது பின்னும் கர்த்தர் சீமோனே, சீமோனே இதோ, கோதுமையைச்சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான் என்று இயேசு சொன்னதை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

எபேசியர் 6:12ல் நாம் வாசிக்கும்போது இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு என்று நாம் வாசிக்கிறோம். ஆனால் தேவன் நம்மை பாதுகாப்பற்றவர்களாக விடவில்லை.

எபேசியர் 6:11-18யை வாசியுங்கள். நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும். அது நாம் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க நம்மை திராணியுள்ளவர்களாக்கும். அந்த சர்வாயுத கவசம் சத்தியம், நீதி, சமாதானத்தின் சுவிசேஷம், விசுவாசம், இரட்சணியம், தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் ஆகியவைகளை உள்ளடக்கியுள்ளது.

I யோவான் 2:14யை கவனமாக வாசியுங்கள். தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் வாலிப கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது அந்த வாலிபர்கள் ஆவிக்குரிய இளமையில் இருந்தார்கள் ஆனாலும் அவர்களை பலவான்கள் என்று சொன்னார். உண்மையிலேயே அவர்கள் சாத்தானாகியப் பொல்லாங்கனை ஜெயித்ததினால் பலவான்கள்தான். எப்படி அந்த புதிய கிறிஸ்தவர்கள் சாத்தானை வெல்லத்தக்க ஆவிக்குரிய வல்லமையையும், திறமையையும் பெற்றுக் கொண்டார்கள்? தேவனுடைய வசனம் அவர்களில் நிலைத்திருந்தது என்று யோவான் சொன்னார். இந்த சகோதரர்கள் தேவனுடைய வசனத்தை தங்கள் இருதயங்களில் அவைகளை படிப்பதன் மூலமாக, தியானிப்பது மூலமாக, அவைகளைக் கைக்கொள்வது மூலமாக நாட்டியிருந்தார்கள். உண்மையில் அவர்கள் தேவனுடைய வார்த்தையை தங்கள் இருதயங்களில் அடக்கம் பண்ணியிருந்தார்கள் (சங்கீதம் 119:11)

யாக்கோபு 4:7ல் நாம் வாசிக்கும்போது இங்கே அநேக ஆவிக்குரிய போராட்டத்தின் அநேக முக்கியமான பகுதிகள் உள்ளன. முதலாவது நாம் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்கும் போது நாம் அவருக்கு கீழ்ப்படிகிறோம். நம்முடைய வாழ்க்கையில் உள்ள எல்லாவற்றையும் விட தேவனுடைய சித்தத்தை செய்வதை முதன்மையாக கொள்ளவேண்டும்.

இரண்டாவது நாம் பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். நாம் ஏற்கனவே படித்தபடி அவன் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றை நம்மை சோதிக்கும்படி உபயோகப்படுத்துகிறான். ஆனால் நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைக் கொண்டு அவனை எதிர்த்தால் அவன் நம்மை விட்டு ஓடிவிடுவான். அவன் நம்மை சோதிக்கும்படி மறுபடியும் வருவான் ஆனால் நாம் அவனை தொடர்ந்து எதிர்த்தால் அவன் நம்மை விட்டு ஓடிவிடுவான்.

தேவனுடைய உதவியுடன் நாம் பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் நாம் ஜெயம் கொள்ள முடியும். I யோவான் 5:4 வசனங்களில் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று நாம் வாசிக்கிறோம். I கொரி 15:57ல் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று நாம் வாசிக்கிறோம். ஜெயங்கொள்ள நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயும், விழித்திருக்கிற வர்களாகவும் இருக்க வேண்டும். வேதவசனமாகிய ஆவியின் பட்டயம் போன்ற தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை நாம் தரித்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை நம் இருதயங்களில் நிலைத்திருக்கிறது என்பதை நாம் நிச்சயிக்க வேண்டும். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்கவேண்டும்.

ரோமர் 8:35-39யை வாசியுங்கள். எவ்வளவு அருமையாக உற்சாகமூட்டும் வசனங்கள் இவைகள். நாம் இந்த உலகத்தில் தற்காலிகமாக வாழும்போது நமக்கு சவாலாக விளங்கும் சில காரியங்களை தேவன் நமக்கு பட்டியலிட்டுக்காட்டுகிறார். அவைகள் உபத்திரவம், வியாகுலம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம், மரணம் கூட நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றவரை கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது. இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம் என்று தேவன் நமக்கு உறுதியளிக்கிறார். வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால் தேவன் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனுக்கு வெறும் வெற்றியை மாத்திரம் வாக்குத்தத்தம் செய்வதில்லை அவர் நம்மை அன்பு கூருகிறவரும் நமக்காக தம்மையே தந்த இயேசு கிறிஸ்து மூலமாக அபரிதமான ஆசீர்வாதத்தை வாக்குத்தத்தம் செய்கிறவருமாயிருக்கிறார்.

எனவே நாம் போராட வேண்டிய ஆவிக்குரியப் போராட்டம் கடினமானதும் சவால் நிறைந்ததுமாகும். ஆனால் தேவன் நமக்கு வசனங்களால் நம்பிக்கையை அளிப்பார் அதன் மூலம் நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து, அவரை விசுவாசித்து அவருக்குக்கீழ்ப்படிவதன் மூலம் நாம் அந்தப் போராட்டத்தில் வெற்றி பெறமுடியும்.

நம்முடைய போராட்டத்திற்குப் பிறகு கூடுதலாக நாம் மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாகயிருந்தால் நமக்காக அநேக பொக்கிஷங்களை தேவன் தருவார். வெளி 2:10யை நாம் வாசிக்கும் போது இயேசு முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு வருகின்ற பாடுகளைக் குறித்து எச்சரித்தார் அவர் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தது போலவே நாமும்

மரணப்பரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நமக்கும் ஜீவகிரீடத்தைத் தருவதாக வாக்குதத்தம் செய்திருக்கிறார்.

II தீமோ 4:6-8யை வாசியுங்கள் அப்போஸ்தலனாகிய பவுல் தான் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறதை அறிந்திருந்தார் அவர் தன்னுடைய ஜீவனை தேவனுக்கு பானபலியாகப் பார்த்தார். அவர் விசுவாசத்தினாலே நீதியின் கிரீடம் தனக்காக வைக்கப்பட்டிருக்கிறதை பார்த்தார். நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்த நீதியின் கிரீடத்தை அந்த கடைசி நாளில் தனக்கு தருவார் என பவுல் உறுதியாக இருந்தார்.

ஆனால சிலக்காரியங்களை மிக ஜாக்கிரதையாக கவனியுங்கள் பவுல் அந்த கிரீடம் தனக்கு மாத்திரமல்ல இயேசுவினுடைய பிரசன்னமாகுதலை விரும்பின யாவருக்கும் என்று சொல்கிறார் நிச்சயமாகவே இயேசு இந்தப்பூமியில் இருந்த போது அவருடைய பிரசன்னமாகுதலை விரும்பினவர்கள் உண்மையாகவே அன்பாக பவுலைப் போல அவருக்குக்கீழ்ப்படிந்தார்கள். நீங்களும் நானும் இந்த விளக்கத்திற்கு பாத்திரவான்களாக இருந்தால் அதே கிரீடத்தை இயேசு நமக்கும் தருவார். இது ஒரு பெரிய வாக்குதத்தம்மல்லவா!

பவுல் ஏன் அந்த கிரீடத்தைப் பெறுவதில் உறுதியாய் இருந்தார்? அவர் நல்ல ஆவிக்குரியப் போராட்டத்தைப் போராடினார்; சகிப்புத்தன்மை நிறைந்த கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடிமுடித்தார். சுவிசேஷமாகிய விசுவாசத்தை அவர் காத்துக் கொண்டார். நாமும் இதுபோன்று செய்வோமென்றால் இதே நம்பிக்கை நமக்கும் இருக்கும். மத்தேயு 25:21யை நாம் வாசிக்கும்போது நாம் உண்மையும், உத்தமமுள்ள ஊழியக்காரர்களாக இருந்தால் அவர் நமக்காக ஆயத்தப்படுத்தியுள்ள சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க முடியும். இத்தகைய மிகப்பெரிய விலையேறப் பெற்ற வாக்குதத்தங்கள் காதுகளில் தொனித்துக் கொண்டிருக்க நாம் ஒளியில் நடப்போம், பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனிடத்தில் அவைகளை அறிக்கை செய்து பாவத்திற்கு எதிராக தினமும் போராடி அவரில் அன்பாயிருந்து, விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிந்தோமானால் நம்பிக்கையுடன் அந்தப் போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவோம்.

அடுத்த மாதம் அநேகக் கேள்விகளுக்கு நாங்கள் பதிலளிப்பதாக நம்புகிறோம். இயேசு மனிதனுடைய பாவப்பிரச்சினைக்கு தேவனுடைய பதிலாக இருப்பதினால் ஒரு கிறிஸ்தவனுக்கு இயேசு யார்? நமக்கு அவருடைய உறவு என்ன? அவருக்கு நம்முடைய உறவு என்ன?

**BENNY** **CHARLIE DIPALMA**

# இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

**சென்ற மாதத் தொடர்ச்சி**

## A நமக்குள் எப்படி பிசாசு வருகிறான்?

(1) I கொரி 15:33 நல்ல ஒழுக்கங்களைக் கெடுக்கும் ஆகாத சம்பாஷனைகள் (2) 1 தீமோ 6:10 எல்லாத் தீமைக்கும் வேராகிய பண ஆசை (3) (1 யோவா 2:15,16) பிதாவானவர் உண்டாக்காததும் நம் இருதயத்தை ஆட்டிப் படைக்க கூடியதுமான "கண்களின் இச்சை", "மாம்சத்தின் இச்சை", "ஜீவியத்தின் பெருமை" (4) எபி 3:15 "அவிசுவாசமான இருதயம்" இன்னும் (யாக் 3:14) கசப்பான வைராக்கியம் (மத் 15:19) பொல்லாத சிந்தனைகள், கொலை பாதகங்கள், விபச்சார, வேசித்தன எண்ணங்கள், களவுகள், பொய் சாட்சிகள், தூஷணங்கள் இவைகளெல்லாம் பிசாசின் வலிமையான ஆயுதங்கள் இவை வழியாகவும் நீதி 16:5 "மனமேட்டிமையுள்ளவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்" நீதி 8:13 அகந்தை, தீயவழி, புரட்டுவாய் ஆகியவைகளையும் அவர் வெறுக்கின்றார். இப்படிப்பட்ட காரியங்களை பிசாசு நம் இருதயத்தில் கொண்டு வந்து நாம் தேவனிடமிருந்து பிரிய வேண்டும் இதுதான் பிசாசின் தந்திரம். (எபே 6:11) நாம் செய்ய வேண்டியது என்ன?

## 3. இருதயத்திற்கு காவல் போடுங்கள்

நீதி 4:23 எல்லாக்காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்... (லூக் 6:45) நல்ல மனுஷன் தன் இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக்காட்டுகிறான் ..... இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய்பேசும் 1 கொரி 6:19 ........ நீங்கள் உங்களுடையவர்களல்ல. ஜீவனுள்ள தேவனின் ஆலயம் நீங்கள் என்றால் அந்த ஆலயம் எவ்வளவு பரிசுத்தம் உடையதாய் இருக்க வேண்டும் 1 கொரி 3:17 ...... "தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது நீங்களே அந்த ஆலயம்" பிரியமானவர்களே நம் இருதயம் எவ்வளவு மேன்மையானது பார்த்தீர்களா?

மத் 5:8 "இருதயத்தில் சுத்தமுடையவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" நீங்கள் இருதயத்தை சுத்தமாக்கினால் தேவ அன்பை, சாந்தத்தை, தேவசமாதானத்தை உங்கள் உள்ளத்திலே உணர்வீர்கள். ஆகவே எனக்கு மிகவும் பிரியமானவர்களே உங்கள் இருதயத்திலுள்ள தேவையற்றதும், துர்நாற்றம் வீசக்கூடியதுமான எண்ணங்களையும் இன்றே தூக்கி எறிந்து விடுங்கள் சத்தியத்தினால் சுத்தமாகுங்கள் (யோவா 17:17) உங்களை சுத்திகரிக்கும் வல்லமை கிறிஸ்துவின் இரத்தத்திலே உண்டு (1 யோவா 1:7)


## 4 சுத்த இருதயத்திற்காக ஜெபியுங்கள்

(சங் 119:7) அவரது பிரமாணங்களைக் கற்றுக்கொண்டு செம்மையான இருதயத்தோடு ஜெபியுங்கள் (யோவா 8:32) சத்தியம் உங்களுக்கு விடுதலையைத் தரும். (சங் 51:10) தேவனே சுத்த இருதயத்தை எனக்குள் சிருஷ்டியும் என ஜெபியுங்கள். அதற்கு முன்பு (நீதி 28:13) உங்கள் பாவங்கள் எதையும் தேவனிடம் மறைக்காமல் அவரிடம் அறிக்கையிடுங்கள். பிறகு இனி ஒரு போதும் அவைகளை மீண்டும் செய்யாதிருங்கள். (எபி 4:12) (எபி 4:13) அவருக்கு மறைவானது ஒன்றுமே இல்லை. ஆகவே, நீங்கள் எதையும் அவரிடம் மறைத்து பிரயோஜனம் ஒன்றுமில்லை (எபி14:15-16) கிறிஸ்து நம் பெலவீனங்களில் இருந்து நாம் வெற்றி பெற நமக்கு உதவுகிற வராயிருக்கிறார். ஆகவே பிரியமானவர்களே! (சங் 119:128) வேதத்தை நேசியுங்கள் (சங் 119:40) வசனம் உங்களை உயிர்பிக்க இடமளியுங்கள். தமஸ்குவிற்கு செல்லும் வழியில் ஆண்டவரைச் சந்தித்த நம்மூத்த சகோதரனாகிய பவுலைப்போல "ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறீர்" எனக்கேட்டானே அதைப் போல உங்களை ஒப்புக்கொடுங்கள் (அப். 9:6). அப்பொழுது அவரது வல்லமை பொருந்திய வார்த்தைகள் சத்தியம் உங்களை பரிசுத்தப்படுத்தி சுத்த இருதயத்தைத் தரும் (யோவான் 10:17). அப்பொழுது, தேவனது பிரசன்னத்தை உங்கள் இருதயங்களில் உணர்ந்து சந்தோஷமாக, மனமகிழ்ச்சியாக தேவன் தந்த இந்த வாழ்க்கையை வாழுவீர்கள். எப்பாடுபட்டாவது சிலவற்றை இழந்தாவது இருதயத்தை சுத்தப்படுத்தி பரலோகத்தின் தேவனை இருயத்தில் கொண்டு வாருங்கள். பரலோக சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ளும்படி உங்களை உளமாற வாழ்த்துகிறேன் தேவசமாதானம் நம் ஒவ்வொருவரின் இருதயத்தையும் ஆண்டுகொள்ளுவதாக.

ஆமென்

**S. PITCHAIMUTHU**

தூத்துக்குடி.



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K.Varghese |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

திருமறை ஆசான்

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# ஏலகிரியில் எட்டாவது வேனிற்கால வேதாகம முகாம் - 2005



சகோ. G.தானியேல்
தேவ செய்தி அளிக்கிறார்.



சகோ. தாமஸ் தங்கதுரை
வாலிபர்களுக்கான சிறப்பு வகுப்பு
நடத்துகிறார்.



எட்டாவது வேனிற்கால
வேதாகம முகாமில் நற்செய்திக்குக்
கீழ்ப்படிந்தவர்களும்,
அவர்களை
வழிநடத்திய ஊழியர்களும்



ஏலகிரி முகாமில்
உணவு இடைவேளையின்
போது ...

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.

Design by: Sun, Kgm. Ph: 222555